# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்
## O.S. No. 209/2023

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திருமதி.சரஸ்வதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **கமலகண்ணன்** | **தொழில்** | : | |
| **தந்தை பெயர்** | : | **வேம்புலி** | **கிராமம்** | : | |
| **வயது** | : | | **வட்டம்** | : | **காஞ்சிபுரம்** |
| **நேரம்** | : | **முற்பகல் 12.00** | | : | |

**வா.சா.1 முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும்.

1) கடந்த 27.09.2010 தேதியில் நான் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த அடமான கடன் பத்திரத்தின் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன் அந்த அடமான கடன் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) கடந்த 27.02.2016 அன்று பிரதிவாதி என்னிடம் பணம் பெற்றுக்கொண்டதாக எழுதிக்கொடுத்த ரசீது நகல் தாக்கல் செய்கிறேன், அந்த ரசீது நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) கடந்த 22.07.2023 அன்று பிரதிவாதிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் தாக்கல் செய்கிறேன் அந்த வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) மேற்கண்ட அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை தாக்கல் செய்கிறேன் அந்த அஞ்சலக ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) தாவா சொத்து குறித்த வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். அந்த வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பம்/-(R.ராஜேஸ்வரி,B.Com.,L.L.M.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.